செ.கு.எண்: 6

நாள்: 04/01/2012.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 4.1.2012

சென்னை, காவல்துறை, பாதுகாப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு. M. ஜார்ஜ் என்பவர் 1.1.2012 அன்று வேலூர் மாவட்டம், சாத்துமதுரை என்ற இடத்தில் சாலை விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.M. ராஜேந்திரன் என்பவர் சாலை விபத்தில் காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 2.1.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

திரு. ஜார்ஜ் மற்றும் திரு. ராஜேந்திரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான சார்பு ஆய்வாளர் திரு. ஜார்ஜ் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் ஆகியோர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

*வெளியீடு, இயக்குநர்*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*